25.08. 2025.

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )**

**விழுப்புரம்.**

**OS.03/2015**

**பி.வா.சா.3**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | ஆனந்தன் | | |
| **த/பெ** | கேசவன் | **மதம்** | |
| **கிராமம்** | பெரியசேவலை | **தொழில்** | இளநிலை உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம், மரக்காணம் |
| **தாலுக்கா** | திருவெண்ணெய்நல்லூர் | **வயது** | 42/ 2025 |
| **மாவட்டம்** | விழுப்புரம் | **தேதி** | 25.08.2025 |

சாட்சி அழைப்பாணை மூலம் வரவழைக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார். இன்று சாட்சி உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மரக்காணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் மரக்காணம் சார்பதிவாளருக்கு சாட்சி சொல்லி சம்மன் வந்தது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் தான் நான் சாட்சி சொல்ல இங்கு வந்துள்ளேன். எனக்கு சாட்சி சொல்ல அதிகாரம் வழங்கி சார்பதிவாளர் அளித்த கடிதம் பி.வா.சா.ஆ.7 ஆகும். அந்த அழைப்பாணையில் எங்களது அலுவலக ஆவணம் ஆவண எண். 788/2012 (வா.சா.ஆ. 11 முதல் 13) தொடர்பாக சாட்சி சொல்ல எங்களுக்கு

அழைப்பாணை வந்தது என்றால் சரிதான். அந்த ஆவணம் என்னிடம் காட்டப்படுவது தான் என்றால், 21/03/2012 தேதியில் பதிவு செய்யப்பட்ட பாகப்பத்திரம் என்றுதான் குறிப்பிட்டுள்ளார்கள். அதில் ரங்கநாதன் செட்டியார் வகையறா என்று குறிப்பிட்டுள்ளதால் அந்த பாக பத்திரம் தான் என்று தெரிந்து அதன் நகலை எடுத்து வந்துள்ளேன். நான் கொண்டு வந்துள்ள பாக பத்திரத்தின் உண்மை நகல் பி.வா.சா.ஆ.8 ஆகும். அந்த பாக பத்திரத்தில் ஒவ்வொரு பக்கத்திலும் 6 பேரும் கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். அந்த பாக பத்திரம் எத்தனை பக்கங்களைக் கொண்டது என்றால், 24 பக்கங்கள் உள்ளது. அந்த பாக பத்திரம் ஒரு அசல் ஆவணத்தின் 4 பிரதிகள் எடுக்கப்பட்டது. அந்த பாக பத்திரம் எழுதும்போது இரண்டாவது தாளிலும், மூன்றாவது தாளிலும், ஒவ்வொரு நபர்களிடமும் போட்டோ ஒட்டி கையெழுத்து பெறப்பட்டது என்றால் சரிதான். அதேபோல் எங்களது சார்பதிவாளர் அலுவலக கைரேகை பதிவேட்டில் நாங்கள் ஒவ்வொருவரின் கையெழுத்து மற்றும் கைரேகை வாங்கினோம் என்றால் சரிதான். பொதுவாக பத்திரம் பதிவு செய்வதற்கு முன்பு தரப்பினர்களை வரவழைத்து விசாரணை செய்வோம். அவர்கள் சரி என்று சொன்னதற்குப் பிறகுதான் பதிவு செய்வோம்.

## <u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் கொண்டு வந்துள்ள பாகப்பத்திரத்தை நான் பதிவு செய்யவில்லை. நான் இந்த துறையில் பணிக்கு சேர்ந்து சுமார் 5 வருடங்கள் ஆகிறது. இந்த பத்திரங்களை யார் பதிவு செய்தது என்றால் ஆவணங்களை பார்த்ததில் சார்பதிவாளர் சேஷா என்பவர் பதிவு செய்துள்ளார் என்று தெரிகிறது. சேஷா என்பவர் இப்போது எங்கு வேலை செய்கிறார் என்றால் இப்போது அவர் ஓய்வு பெற்று விட்டார். அவர் ஓய்வு பெற்று விட்டது குறித்து எனக்கு எப்படி தெரியும் என்றால், சார் பதிவாளர் அலுவலகத்தில் உள்ளவர்கள்

சொன்னார்கள். இந்த பத்திரம் எங்கள் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்பதை தவிர இந்த பத்திரத்தை குறித்து எனக்கு வேறு எதுவும் தெரியாது.

**<u>மறு விசாரணை</u>**

**<u>இல்லை.</u>**

Taken down before / by me in open court and read over/ interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Additional District Judge,
Villupuram.